**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தூலூர்**

**முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, தூலூர்**

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 16 ம் நாள்

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30-ம் நாள் திங்கள்கிழமை

**இடைக்கால மனு எண்.4/2026**

**in**

**அசல் வழக்கு எண்.146/2018**

உமாமகேஸ்வரி ... **மனுதாரர் / வாதி**

//எதிர்//

அசோக்குமார் ... **எதிர்மனுதாரர்/பிரதிவாதி**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.D.சித்ரா, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.பழனிசாமி, அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151 ன் கீழ் வா.சா.1 சாட்சியை திரும்ப அழைத்து மேலும் விசாரணை செய்து கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:**

1.1). மனுதாரர்/வாதி பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடை உத்தரவு கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் மனுதாரர்/வாதியின் சார்பாக, அவரது கணவர் சந்திரசேகர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, பிரதிவாதியின்

வழக்கறிஞரால் குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டு, வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. வா.சா.1 முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணையில் மனுவில் கூறியுள்ள ஆவணங்கள் வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்யப்படவில்லை. இப்போதுதான் மனுதாரர்/வாதிக்கு அது தொடர்பான சில ஆவணங்கள் கிடைக்கப் பெற்றது. எனவே சமீபத்தில் மனுதாரர்/வாதிக்கு கிடைத்த ஆவணங்களைக் குறியீடு செய்ய விரும்புகிறார்.

1.2). மனுதாரர்/வாதி தரப்பு வழக்கை நிரூபிப்பதற்கு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை, மனுதாரர்/வாதி சார்பாக குறியீடு செய்வதற்கு வா.சா.1 திரும்ப அழைக்க வேண்டி இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். எனவே வா.சா.1 திரும்ப அழைத்து மேலும் விசாரணை செய்யப்பட்டு, கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வது அவசியமாக உள்ளது. வா.சா.1 திரும்ப அழைத்து மேலும் விசாரணை செய்யப்பட்டு, கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்யப்படாவிட்டால் வது மனுதாரர்/வாதிக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு ஏற்படும். மனு அனுமதிக்கப்பட வேண்டும்

**2). எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:**

2.1). மேற்படி மனு பொய்யானது, மோசடியானது. மேற்படி மனுவானது சட்டப்படியும், பொருண்மைகளின் படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் சொல்லி உள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் I.ANo.5/26 மனுவில் குறிப்பட்டுள்ள Commissioner Report and Expert opinion ஆவணங்களை அசல் வழக்கு எண்.181/2018 வழக்கில் தான் பெற்றுள்ளார். Commissioner Report and Expert opinion வேண்டும் என்று கேட்கவில்லை மேலும் அசல் வழக்கு எண்.146/2018 வழக்கில் உள்ள தரப்பினர்கள் வேறுநபர்கள். அதே போல அசல் வழக்கு எண்.181/2018 வழக்கில் உள்ள தரப்பினர்கள் வேறு நபர்கள். O.S.181/2018 வழக்கில் பெற்ற Commissioner Report and Expert opinion

இரண்டையும் அசல் வழக்கு எண்.146/2018 வழக்கில் மனுதாரர் குறியீடு செய்வதற்காக மேற்படி வழக்கில் I.A.No.5/26 ல் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை மேற்படி வழக்கில் குறியீடு செய்வதர்காக மனு தாக்கல் செய்துள்ளார் அதை எதிர் மனுதாரர் ஆட்சேபனை செய்து கொள்கிறார்.

2.2). மேலும் அசல் வழக்கு எண்.146/2018 வழக்கு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் ஆகும். ஆனால் அசல் வழக்கு எண்.181/2018 என்ற வழக்கு விளம்புகை பரிகாரம் ஆகும். இரண்டு வழக்குகளின் பரிகாரங்களும் வேறு வேறு ஆகும். இரண்டு வழக்குகளிலும் தரப்பினர்களும் வேறு வேறு நபர்களாகும். மனுதாரர் அசல் வழக்கு எண்.181/2018 வழக்கில் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து, அவர் சிங்காநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் கைரேகை பதிவேடுகளில் 28.10.1996-ல் பதிவான ஆவண எண் 356/BK4/1996 மற்றும் 16-5-2011-ல் பதிவான ஆவண எண் 4608/2011 க்கு உண்டான கைரேகை பதிவேடுகள் மற்றும் பிரதிவாதிகளின் கைரேகைகள் ஆகியவற்றை பெற்று சென்னையில் உள்ள கைரேகை நிபுணரிடம் சமர்ப்பித்து அதன் உண்மை தன்மைக்கான சான்றிதழ் பெற்று நீதி மன்றத்தில் ஒப்படைக்க கோரி மனு செய்து உள்ளனர். ஆனால் அசல் வழக்கு எண்.146/2018 வழக்கும் இந்த கைரேகை நிபுணரின் அறிக்கைக்கு உட்பட்டவை என்ற வாசகம் மனுதாரரின் மனுவில் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. எனவே தான் அசல் வழக்கு எண்.181/2018 வழக்கில் பெறப்பட்ட கைரேகை நிபுணரின் அறிக்கையை அசல் வழக்கு எண்.146/2018 வழக்கில் குறியீடு செய்வதை எதிர்மனுதாரர் ஆட்சேபனை செய்கிறார்.

2.3). அசல் வழக்கு எண்.181/2018-வழக்கில் கைரேகை நிபுணரால் தாக்கல் செய்த அறிக்கை தவறாக பரிசீலனை செய்து போடப்பட்டுள்ளதால் அசல் வழக்கு எண்.181/2018 வழக்கில் பெறப்பட்ட கைரேகை நிபுணரின் அறிக்கையை எதிர்மனுதாரர் ஏற்றுக் கொள்ளாமல் ஆட்சேபனை செய்து உள்ளார். அசல் வழக்கு எண்.146/2018- வழக்கில் எதிர் மனுதாரர் சார்பில் புதிதாக அறிக்கை வேண்டி

Commissioner நியமிக்கவும் கைரேகை ஆவணங்களை மீண்டும் அனுப்ப மனு செய்ய உள்ளதாலும், அசல் வழக்கு எண்.181/2018 வழக்கில் பெறப்பட்ட அறிக்கையை அசல் வழக்கு எண்.146/2018 வழக்கில் குறியீடு செய்வதை எதிர்மனுதாரர் ஆட்சேபனை செய்கிறார். எனவே, மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**3. தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது யாதெனில்? இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.**

4. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

5. மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரர்/வாதி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

5.1). மனுதாரர் தரப்பில், இப்போதுதான் மனுதாரர்/வாதிக்கு மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் கிடைக்கப் பெற்றது என்றும், அந்த ஆவணங்களைக் குறியீடு செய்ய விரும்புவதாகவும், மனுதாரர்/வாதி தரப்பு வழக்கை நிரூபிப்பதற்கு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் குறியீடு செய்வதற்கு அவற்றை முன்கூட்டியே சமர்ப்பிக்க முடியவில்லை என சொல்லப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில், அசல் வழக்கு எண்..181/2018 வழக்கில் பெற்ற Commissioner Report and Expert opinion இரண்டையும் குறியீடு செய்வதற்காக மனு தாக்கல் செய்துள்ளார். இரண்டு வழக்குகளின் பரிகாரங்களும் வேறு வேறு ஆகும். இரண்டு வழக்குகளிலும் தரப்பினர்களும் வேறு வேறு நபர்களாகும். அசல் வழக்கு எண்.146/2018- வழக்கில்

எதிர் மனுதாரர் சார்பில் புதிதாக அறிக்கை வேண்டி Commissioner நியமிக்கவும் கைரேகை ஆவணங்களை மீண்டும் அனுப்ப மனு செய்ய உள்ளதாலும், அசல் வழக்கு எண்.181/2018 வழக்கில் பெறப்பப்பட்ட அறிக்கையை அசல் வழக்கு எண்.146/2018 வழக்கில் குறியீடு செய்வதை எதிர்மனுதாரர் ஆட்சேபனை செய்கிறார் என ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

5.2). மேற்படி பரிசீலனைகளில் இருந்து, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில், வாதி இம்மனுவை தாக்கல் செய்து அசல் வழக்கு எண்.181/2018 ல் வழக்கில் உள்ள Commissioner Report and Expert opinion ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வா.சா.1 திரும்ப அழைக்க வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

5.3). இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால், இரு தரப்பினரும் இந்த நீதிமன்றத்தின் முன் இரு தரப்பு வழக்கையும் தெளிவுபடுத்த வாய்ப்பளிக்க வேண்டும். இந்த நீதிமன்றம் இரு தரப்பு வாய்மொழி மற்றும் ஆவணச் சான்றுகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். மேற்படி மனுவில் ஆவணங்களை தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களின் தொடர்பு குறித்தும், அதன் செல்லுத்தன்மை குறித்தும் அசல் வழக்கு தீர்ப்பின் போது தீர்வு காணப்படும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, மனுதாரர்/வாதி தனது வழக்கை நிரூபிக்க வா.சா.1 திரும்ப அழைத்து கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்கு மற்றொரு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால்

படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** - இல்லை.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** - இல்லை.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

Draft/Fair order
IA.No.4/2026 in
OS.146/2018 in
Dated:.30.03.2026
DMC, Sulur.